செ.வெ.எண்: 163/2020 நாள்: 23.03.2020

**திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில்
அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களிடம்
கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு
மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்றது...**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (23.03.2020) பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை, வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், நகராட்சி நிர்வாகம் மூலமாக கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பொ. இரத்தினசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா, திட்ட அலுவலர் மகளிர் திட்டம் திருமதி. சந்திரா, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. ஆனந்த்மோகன், இ.ஆ.ப., துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி. மந்தாகினி, மாவட்ட ஆட்சியரக அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், தினசரி நாளிதழ்கள் மற்றும் செய்தி தொலைக்காட்சிகளில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (23.02.2020) கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்த விழிப்புணர்வு அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களிடம் ஏற்படுத்தப்பட்டது. இதில், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் வரிசையில் இடைவேளை விட்டு நிறுத்தப்பட்டு, கை கழுவும் முறைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டு கை கழுவ செய்யப்பட்டனர். மேலும், அனைவருக்கும் உடலின் வெப்ப அளவை கண்டறியும் தெர்மல் பரிசோதனை மருத்துவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இதனை தொடர்ந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள கை சுத்திகரிப்பான் (Hand Sanitizer) அளிக்கப்பட்டு, அனைவருக்கும் துணியால் தயாரிக்கப்பட்டுள்ள முகமூடி (Face Mask) இலவசமாக வழங்கப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மகளிர் குழு உறுப்பினர்கள் மூலம் முதல் கட்டமாக 10,000-ம் முகமூடி (Face Mask), 1000-ம் கை சுத்திகரிப்பான் (Hand Sanitizer) தயாரிக்கப்பட்டு சுகாதாரத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட ஆட்சியர் அவர்கள் குறும்படங்கள் மூலமாக கொரோனா வைரஸ் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடம் ஏற்படுத்ததுவதற்கான நடமாடும் வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் கொரோனா வைரஸ் நோய்க்கான சிறப்பு தனி பிரிவினை (Isolation Ward) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது, திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துமவனை முதல்வர் மரு. கே. திருமாள்பாபு, மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு. சகீல்அகமது, இணை இயக்குநர் நலப்பணிகள் மரு. பாண்யடின், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் உடன் இருந்தனர்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் ‘திருவண்ணாமலை மாவட்டத்தில் சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் போன்ற விமான நிலையங்கள் வழியாக 123 நபர்கள் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர்களில், தற்போது 70 நபர்கள் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு (Home Quarantine) சுகாதாரத் துறை மூலமாக தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள். திருவண்ணாமலை மாவட்ட எல்லைகளிலும் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. செய்யாறு சிப்காட் வளாகம் ஊழியர்களின் நலன் கருதி இன்று 23.03.2020 முதல் 31.03.2020 வரை ஊதியத்துடன் விடுப்பு அளிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் நாளை 24.03.2020 மாலை 06.00 மணி முதல் 31.03.2020 வரை 144 உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. மாவட்ட எல்லைகளில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, வருவாய்த் துறை குழு, மருத்துவக் குழு, காவல் துறை குழு, ஆகிய குழுக்கள் மூலம் கண்காணிக்கப்படும்.

அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும், பொது இடங்களில் 5 நபர்களுக்கு மேல் நடமாடக்கூடாது, வெளியில் நடமாடாமல் வீட்டில் இருக்க வேண்டும், இது தான் கொரோனா வைரஸ் நோயிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான சிறந்த சிகிச்சை ஆகும். தற்போது சர்வதேச விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதால் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் நோய்க்கான ஆய்வக பரிசோதனை முடிவு 24 மணி நேரத்தில் கிடைக்கும். திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துமவமனையில் 100 படுக்கைகளுடன் கொரோனா வைரஸ் நோய்க்கான சிறப்பு தனி பிரிவு (Isolation Ward) 24 மணி நேரம் செயல்படக் கூடிய வகையில் தயார் நிலையில் உள்ளது’ என்றார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**